1979 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பல சலுகைகளை அளித்திருக்கிறது. அந்த சலுகைகளின் அடிப்படையில் இந்த உதவியும் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தனியாகக் கேள்வி போட்டால் இதைப்பற்றி இன்னும் விவரமாகப் பதில் தருகிறேன்.

புத்தநந்தல் அணைத் திட்டம்.

*வினா எண். 253—திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார—

1969 ம் ஆண்டு திட்டம் தீட்டப்பட்டு 1971-ல் அதற்கென்று தொகை ஒதுக்கியும் செயல்படுத்தப்படாமல் உள்ள புத்தநந்தல் அணைக்கட்டுத் திட்டத்தை அரசு செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 1969 ஆம் ஆண்டில் இது போன்ற திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை.

திரு. வ. துலுக்காணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைத்திட கரங்கள், உற்பத்தியைப் பெருக்கிட இதய பூர்வமான உணர்வுகள், உயிர்த்துடிப்பாக உள்ள நாடாக தமிழகத்தை மாற்றிட வேண்டும் எனவும், தந்த மாளிகையிலேயே உள்ளவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும், அப்போது தான் திட்டப்படுகின்ற திட்டத்தில் உண்மை படம் புரியும் எனவும் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் கூறியுள்ளார்கள். உண்மையிலேயே ஆண்டு ஆண்டுக் காலமாக உழைத்து உழைத்து அலுத்துப்போன தாழ்வாரப் பகுதியிலுள்ள உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சேர்ந்த உளுந்தூர்பேட்டை யூனியன் பகுதி, தியாகதுர்கம் யூனியன் பகுதி, நல்லூர் யூனியன் பகுதியில் உள்ள மக்கள் இவர்களின் நல்வாழ்வுக்காக கோமுகி நதி, ஆளாங்குறிச்சி அணை இரண்டையும் சேர்த்து சேஷ நதியையும் இணைத்து, கெடிலம் நதியாக மாறுகின்ற புத்தநந்தல் அணைக்கட்டு திட்டத்தை ஒரு நடுத்தர பாசனத் திட்டமாக உடனடியாக ஏற்று, அப்பகுதியில் உள்ள பாசன ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு வந்து விட்டால் போதுமான நல்ல திட்டமாக அமைய முடியும். இந்த நல்ல திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு உண்டான ஆய்வு வேலைகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகுபேரவைத்தலைவர்: முதலில் உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கேள்வியை கேட்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கேள்வியைக் கேட்டிருருக்கிறார்கள், இப்போது மாண்புமிகு உறுப்பி

னர் திரு. ஆறுமுகம் அவர்கள் இல்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குத் தகுந்தாற்போல் அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், தந்த மாளிகையிலுள்ளவர்கள் தாழ்வாரத்திற்கு வரவேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய கொள்கை. அதே நேரத்தில் கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியக்கூடாது என்ற கொள்கையும் இருந்து வருவதை திரு. துலுக்காணம் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாசனத் திட்டங்களை நிறைவேற்ற அரசு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

புராணசிங்குபாளையம் ஏரி.

*வினா எண் 254 — திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் வரதானூர் புராணசிங்குபாளையம் ஏரியின் நீர்ப்பாசன கால்வாய் நீண்ட நாட்களாக வெட்டப்படாததால் இந்த ஏரிக்கு நீர் வரத்து வராமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தென்னாற்காடு மாவட்டம், கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வரதானூர் ஊராட்சி புராணசிங்குபாளையம் ஏரிக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றி தண்ணீர் வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

திரு கோ. ரகோத்தமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாக எத்தனை ஏக்கர் நிலம் பாசனத்திற்குப் பயன் பெறுகிறது? இந்த ஏரியின் உட்புறத்திலே ஆக்கிரமிப்பு செய்து, பயிர் செய்து கொண்டு வருவது இந்த அரசுக்குத் தெரியுமா? அவர்களை அப்புறப்படுத்துவதற்கும், மேலும் இந்தக் கால்வாயை விரிவு செய்வதன் மூலம் அதிகப் பாசன வசதி பெற முடியும். எனவே, அதை விரிவுபடுத்தவும் இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியின் மூலமாகப் பாசன வசதி பெறுவது 255 ஏக்கர். இந்த வரதானூர் ஏரியின் நீளம் 14·5 கிலோ மீட்டர். இந்த ஏரியின் மூலமாக ஏறத்தாழ 8 ஏரிகள்